செ.வெ.எண்.61 நாள்.26.12.2017.

திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் தனிநபர் கழிப்பிடம் திட்டம், கொசு ஒழிப்பு பணிகள் ஆகிய பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

--------

திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் தனிநபர் கழிப்பிடம் திட்டம், கொசு ஒழிப்பு பணிகள் ஆகிய பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

கடையம் ஊராட்சி ஒன்றியம், பாப்பான்குளம்–ஆழ்வார்குறிச்சி வரை நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.61.35 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட இணைப்பு சாலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். தொடர்ந்து, பாப்பான்குளம் சுற்றுப்பகுதியில் தனிநபர் இல்ல கழிப்பறை இறுதி கட்டப் பணிகளையும், கொசு ஒழிப்பு பகுதிகளையும் ஆய்வு செய்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் 3000 பணியாளர்கள் கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், சார் ஆட்சியர், உதவி ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்களுடன் இணைந்து காலை 6.00 மணி முதல் கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு கொசு பாதிப்பு கட்டுப்பாட்டில் உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், இல்லத்தரசிகள் ஆகியோரை இணைத்து குழு ஒன்று அமைத்து கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மாவட்டத்திற்கு தேவையான அளவு கொசு மருந்து மற்றும் இயந்திரம் இருப்பில் உள்ளது. கொசு மருந்து அடிக்க தேவையான இடங்களை மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியபடுத்தினால், தங்களது இடங்களுக்கு சுகாதாரத் துறை பணியாளர்கள் மூலம் கொசு மருந்து அடிக்கப்பட்டு, கொசு உற்பத்தியாவது தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தண்ணீரில் குளோரின் அளவு தினமும் மாவட்ட நிர்வாகத்தின் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் காய்ச்சல் வந்தவுடன் அரசு மருத்துவமனை சென்று தகுந்த சிகிச்சை பெற வேண்டும். மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் போலி மருத்துவர்களை தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போலி மருத்துவகளை கண்டுபிடிக்க வருவாய்த் துறை மற்றும் காவல் துறையுடன் குழு அமைக்கப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

ஆய்வின் போது, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (வளர்ச்சி பிரிவு) திரு.முத்து இளங்கோ, (சத்துணவு) திருமதி.பேச்சியம்மாள், திருநெல்வேலி சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் திரு.வெங்கட்ராமன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சாந்தி, திருமதி.அருணாதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.சக்தி முருகன், உதவி செயற்பொறியாளர் (சாலைகள் மற்றும் குறும்பாலங்கள்) திரு.லெட்சுமணன் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.